# தலைவர் கலைஞருக்கு 'பாரத் ரத்னா' வழங்க வேண்டும்!

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!



**புதுடெல்லி, டிச. 13 - இந்தியாவின் உயரிய குடிமகன் விருதான 'பாரத் ரத்னா' விருதை முத்தமிழறிஞர் தலைவர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதிக்கு வழங்க வேண்டும் என மக்களவையில் நேரமில்லா நேரத்தில் தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.**

**மக்களவையில் பேசுகையில் அவர் கூறியதாவது:**

“திராவிட மரபின் முன்னோடியாகவும், சமூக நீதிக்கும் சமத்துவத்துக்கும் அடித்தளம் அமைத்த தலைவராகவும் திகழ்ந்த மாமனிதர் தலைவர் கலைஞரை போன்ற ஆளுமையை இந்த உலகம் அரிதாகவே கண்டுள்ளது. அவரின் தொலைநோக்குக் கொள்கைகள், இலக்கிய ஆளுமை, அரசியல் ஞானம் – அனைத்தும் காலத்தால் அழியாதவை, என அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

“இந்திய அரசியலில் கலைஞரின் பயணம் 16 வயதிலேயே தொடங்கியது. 1957 முதல் 2016 வரை 60 ஆண்டுகளாக நடைபெற்ற அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற ஒரே தலைவர் என்ற அசைக்க முடியாத சாதனையை அவர் படைத்துள்ளார். ஏழை, பின்தங்கிய மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் அவரது திறமை, அவரை மக்களின் இதயங்களில் நிரந்தரமாக பதியச் செய்துள்ளது.

கலைஞரின் இலக்கியப் பயணத்தையும் தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்பித்தார்:

“நாடகங்கள், உரைகள், தமிழ் சினிமா – எதை எடுத்தாலும் கலைஞரின் எழுத்துகள் சாதி, மூடநம்பிக்கை போன்ற தீமைகளிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் விதமாகப் புரட்சியை ஏற்படுத்தின. தமிழ் சமூகத்தில் அவர் விதைத்த சிந்தனைகள் 'திராவிட மாடல்' ஆட்சிக்கான வலுவான அடித்தளமாக அமைந்தன, என அவர் தெரிவித்தார்.

அரசியலில் அவரது பங்களிப்பை வலியுறுத்தினார்:

“அவர் கையெழுத்திட்ட ஒவ்வொரு திட்டமும் அடுத்த தலைமுறை அரசியல்வாதிகளுக்கான முன்மாதிரியாக மாறியுள்ளது. கலைஞரின் நகைச்சுவை உணர்வு, அறிவாற்றல், அரசியல் நுண்ணறிவு, பரிவு இவை அனைத்தும் அவரை எல்லோராலும் மதிக்கப்பட்ட தலைவராக ஆக்கியது. தனது காலத்தில் பதவி வகித்த அனைத்து குடியரசுத் தலைவர்களுடனும், பிரதமர்களுடனும் அவர் நல்லுறவை பேணி வந்தார். அவரது வாழ்க்கை பணியை நினைவுகூர்ந்த தமிழச்சி தங்கப்பாண்டியன்,

“தன் வாழ்நாள் முழுவதையும் ஏழை, பின்தங்கிய மக்களின் உயர்விற்காக அர்ப்பணித்த தலைவர் கலைஞருக்கு இந்தியாவின் மிக உயரிய குடிமகன் விருதான 'பாரத் ரத்னா' வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழர்களின், தாய்மொழி அன்பர்களின், சமூக நீதி விரும்பிகளின் நெஞ்சார்ந்த கோரிக்கை, என வலியுறுத்தினார்.

இதனுடன், கலைஞர் ஆற்றிய அரசியல், சமூக, இலக்கிய பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் ஒன்றிய அரசு உடனடியாக பாரத் ரத்னா விருது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மக்களவையில் கேட்டுக் கொண்டார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு வஃக்பு வாரிய உறுப்பினர், தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். அ.சுபேர் கான் புனித நகரமான மெக்காவிற்கு உம்ரா பயணம் மேற்கொண்டதையொட்டி, நேரில் சந்தித்து நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## சிபில் ஸ்கோர் என்ற மூன்று இலக்க எண்ணை வைத்துக்கொண்டு

# கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் தனியார் அமைப்புகள்!

## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கண்டனம்!

**புதுடெல்லி, டிச. 13 - மாநிலங்களவையில் நேரமில்லா நேரத்தின்போது தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி. என்.சோமு பேசியதாவது:**

கோடிக்கணக்கான இந்திய மக்களின் வாழ்வாதாரக் கனவுகளோடு விளையாடும் வகையில், கடனுதவி பெறும் விவகாரத்தில் சிபில் ஸ்கோர் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு, கட்டுப்பாடும் கண்காணிப்பும் இல்லாமல் செயல்படும் சில நிறுவனங்கள் பற்றி இங்கே பேச விரும்புகிறேன்.

மாணவர்கள், இளம் தொழில் முனைவோர், பெண்கள், விவசாயிகள் என யார் கடன் கேட்டு வங்கிகளை அணுகினாலும் சிபில் ஸ்கோர் என்ற மூன்று இலக்க எண்ணை வைத்துக்கொண்டு இவர்கள் நடந்துகொள்ளும் விதம் பெரும்பாலான இந்தியர்களின் கனவுகளைச் சிதைக்கிறது. ஒருவரின் வருமானம், சமூக அந்தஸ்து, தனி நபர் சுதந்திரம், மரியாதை, மனித உணர்வுகள் இவை எல்லாவற்றையும் விட இந்த சிபில் ஸ்கோர்தான் பிரதானம் என்ற அவல நிலை இந்த நாட்டில் நிலவுகிறது.

இந்த சிபில் ஸ்கோரை காரணம் காட்டி சர்வ சாதாரணமாக கடன் விண்ணப்பங்களை வங்கிகளும் வங்கிகள் அல்லாத கடன் நிறுவனங்களும் நிராகரி க்கின்றன. இவ்வளவு முக்கியத்துவத்தை எப்படியோ பெற்றுவிட்ட இந்த சிபில் ஸ்கோரை தீர்மானிக்கும் நிறுவனத்தை கண்காணிக்கவோ, கட்டுப்படுத்தவோ, முறைப்படுத்தவோ அரசின் சார்பாக ஏதேனும் ஏற்பாடு இருக்கிறதா என்பது பற்றியும் தெளிவில்லை.

நம்முடைய சிபில் ஸ்கோரை இவர்கள் எப்படித் தீர்மானி க்கிறார்கள் என்பதும் புரியவில்லை. அது சரியா நடக்கிறதா? என்ன அளவுகோல்? யார் இதைத் தீர்மானி க்கிறா ர்கள்? அங்கே தவறுகள் இல்லாமல் இது நடக்கிறதா? என்பது யாருக்கும் தெரியாது.

தன் விஷயத்தில் தவறாக சில விஷயங்களை முடிவு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கும் ஒரு நபர், யாரை அணுகி அந்தத் தவறை சரி செய்வது என்பதிலும் எளிமையான வழிகள் இல்லை. படித்தவர்களின் நிலையே இப்படி என்றால், கடனுதவியால்தான் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும் என்ற நிலையில் உள்ள பாமரர்களின் நிலை என்ன? அதிலும் தவறை சரி செய்யும் பொறுப்பை அந்த நிறுவனம் ஏற்காதாம்; அந்தத் தனி நபரே சரி செய்ய வேண்டுமாம்.



இந்த நிலையில், உங்கள் சிபில் ஸ்கோரை எப்படி அதிகமாக வைத்திருப்பது? குறையாமல் பார்த்துக்கொள்வது எப்படி? என்ற கோஷங்களுடன் சில தனியார் நிறுவனங்களும் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதற்கு ஒரு பெரும் தொகையைக் கட்டணமாகவும் வசூலிக்கிறார்கள். இவர்கள் யார்? இவர்களுக்கு இந்த அனுமதியைத் தந்தது யார்? எதுவும் தெரியாது. தங்கள் சிபில் ஸ்கோரில் செய்யப்பட்ட தவறுகளைச் சரி செய்யவே அப்பாவி மக்கள் பணம் செலவிட வேண்டி உள்ளதுதான் வேதனையான விஷயம்.

நிதி மேலாண்மை உள்ளிட்ட எந்த விஷயமும் இயந்திரங்களாலோ, கணக்கீடுகளாலோ மட்டும் முடிவு செய்யப்படுவதில்லை. மனித உணர்வுகளை, தனி மனித சூழல்களையும் கவனத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும். எனவே, இந்த சிபில் ஸ்கோர் விஷயத்தை முழுமையாகக் கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில், சட்டபூர்வமான, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய ஓர் அமைப்பை ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்தால் மட்டுமே தவறுகள் நடைபெறாமலும், தவறுகள் ஏற்பட்டாலும் எளிதில் சரிசெய்யும் வாய்ப்பும் ஏற்படும். அத்துடன் வங்கிகள் கடன் வழங்கும்போது இயந்திரத்தனமாகச் செயல்படாமல், மனித உணர்வுகளை மதித்துச் செயல்படவும் அது வழிவகுக்கும்.

கடன் வழங்குவது என்பது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, சமூக அதிகாரத்தை அவர்களுக்கு வழங்குவதாக இருக்க வேண்டுமே தவிர, லாபத்தை மட்டுமே கணக்கில் கொண்டதாக இருக்கக் கூடாது. நம் குடிமக்களின் நிதி சார்ந்த கவுரவத்தை கட்டுப்பாடற்ற, வெளிநபர்கள் தீர்மானிப்பதை அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு டாகடர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

## நெல்லின் ஈரப்பதத்தில் தளர்வு வழங்க மறுப்பதா?

# கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் எதிரான செயல்!

## மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!

**புதுடெல்லி, டிச. 13 - நெல்லின் ஈரப்பதத்தில் தளர்வு வழங்கி தமிழ்நாடு விவசாயிகளுக்கு உதவ மறுப்பது கூட்டாட்சித் தத்துவதிற்கு முற்றிலும் எதிரானது என்று மக்களவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பேசுகையில் குறிப்பிட்டார்.**



மக்களவையில் அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை விவாதிக்க வலியுறுத்தி அவை அலுவல்களை ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கோரி வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.

மக்களவையில் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை விதி 56ன் கீழ் முன்மொழிந்த தீர்மானத்தின் விபரம் கீழ்வருமாறு:

”முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பருவமழையால் ஏற்படும் ஈரப்பதம் இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் செய்வதற்கான அனுமதிக்கப்பட்ட ஈரப்பத வரம்பை 17 சதவீதத்திலிருந்து 22% ஆக தளர்த்த ஒன்றிய அரசு மறுத்துவிட்டது, இது நேரடி கொள்முதல் மையங்களில் நெல் பரவலாக நிராகரிக்கப்படுவதற்கும், காவிரி டெல்டா பகுதியில் உள்ள லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு கடுமையான துயரத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்தது.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கடிதங்கள் உட்பட தமிழக அரசின் பல எழுத்துப்பூர்வ கோரிக்கைகளை நிராகரித்த ஒன்றிய அரசின் செயல்பாடுகள் வேதனையளிக்கிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்டோபர் 19, 2025 மற்றும் நவம்பர் 18, 2025 தேதியிட்ட கடிதங்களைத் தொடர்ந்து, மத்திய குழுவின் கள மதிப்பீடு 2527 அக்டோபர் 2025 அன்று அசாதாரண ஈரப்பத நிலையை உறுதிப்படுத்திய பிறகும் கூட தமிழக அரசின் நியாயமான கோரிக்கை ஒன்றிய அரசால் நிராகரிக்கப்பட்டது மிகவும் வருத்தமளிக்கிறது.

தற்போது வடகிழக்கு பருவமழையின் போது அறுவடை செய்யப்பட்ட ஈரமான நெல்லை கொள்முதல் மையங்கள் நிராகரித்து வருவதால் இந்த பிரச்சினை குறித்து விவாதித்து தீர்வு காண்பது மிக மிக அவசரமானது மட்டும் அல்ல அவசியமானதும் கூட.

தொடர் கனமழை மற்றும் ஈரப்பதம் காரணமாக தங்கள் விளை பொருட்களை வெயிலில் காய வைக்க முடியாத விவசாயிகள், தனியார் வியாபாரிகளுக்கு சொற்ப விலையில் விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். 40 48 லட்சம் டன்கள் அபரிமிதமான அறுவடை முழுமையான நிதி இழப்பு ஏற்படும் அபாயத்தில் உள்ளது. முக்கியமான விவசாய பருவத்தில் விவசாயிகள் வருமானத்தை இது கடுமையாக பாதிக்கிறது.

பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த பிரச்சினை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் கடலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் உள்ள லட்சக்கணக்கான சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கிறது.

ஈரப்பதத்தில் தளர்வு வழங்க மறுப்பது கிராமப்புற பொருளாதார ஸ்திரத்தன்மையை அச்சுறுத்துகிறது, கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது. மாநில மத்திய கூட்டுறவு மற்றும் தேசிய உணவு பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது, ஏனெனில் தமிழ்நாடு மத்திய தொகுப்பில் முக்கிய பங்களிப்பாளராக உள்ளது. உடனடி நிவாரணம் வழங்கப்படாவிட்டால், மாநிலம் பெரிய அளவிலான விவசாயிகளின் போராட்டங்களையும், நிதி நெருக்கடி காரணமாக நெல் சாகுபடியில் நீண்டகால பாதிப்பையும் சந்திக்க வாய்ப்புள்ளது.

எனவே, இந்த கோரிக்கையை நாடாளுமன்ற அமர்வில் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## புகையிலைப் பொருட்கள் விற்பனையைத் தடுப்பதற்குப் பதிலாக -

# அவற்றின் உற்பத்தி எந்திரங்களுக்கு கூடுதல் வரி விதிப்பது பொருத்தமற்றது!

## மாநிலங்களவையில் - இரா.கிரிராஜன் பேச்சு!

**புதுடெல்லி, டிச. 13 - பான்மசாலா மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற தீங்கு விளை விக்கும் பொருட்களின் விற்பனையைத் தடுக்க ஒன்றிய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, அவற்றின் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் மீது கூடுதல் வரிகளை விதிப்பது பொருத்தமற்றது என்றும் நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் உரையாற்றியுள்ளார்.**



புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்களுக்கு கூடுதல் கலால் வரி விதிக்கும் மசோதாவான மத்திய கலால் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திமுகவை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான கிரிராஜன், மத்திய ஜிஎஸ்டி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மத்திய கலால் வரி சட்டம் ரத்து செய்யப்பட்டதாகவும், அதில் புகையிலை மற்றும் புகையிலை பொருட்களும் அடங்கும் என்றும், ஜிஎஸ்டி கவுன்சிலின் சமீபத்திய முடி வின்படி செஸ் வரியை நிறுத்தவும், இரண்டு அடுக்கு வரி விதிப்பு நடைமுறைப்படி ஆடம்பர பொருட்களுக்கான வரிவிதிப்பின் கீழ் புகையிலை பொருட்கள் வருவதாக குறிப்பிட்டார்.

புகையிலை தவிர அனைத்து பொருட்களுக்கும் இழப்பீட்டு செஸ் வரியை நிறுத்தவும், அதி ஆடம்பரப் பொருட்கள் மீதான உடல் நலனுக்குத் தீங்கு விளை விக்கக்கூடிய பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரியை 40% வரை விதிக்க ஜிஎஸ்டி கூட்டமைப்பு உறுதிசெய்துள்ளதையும் குறிப்பிட்டு பேசினார்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், புகையிலை மீதான ஜிஎஸ்டி இழப்பீட்டு செஸை மத்திய கலால் வரியாக மாற்றப்பட்டுவிடும் என்றும், அதன்பின்னர் மத்திய கலால் வரி விகிதங்களை மாற்றியமைக்க மத்திய அரசு அனுமதிக்க என்பதால், வரி உத்தரவாத்ததை மாற்றாமல் வருவாய் நடுநிலைமையை உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தி உரையாற்றினார். செஸ் வரிவிதிப்பு முழுவதையும் மத்திய அரசு எடுத்துக் கொள்வதால், மாநிலங்களுக்கு அதில் எந்தப் பங்கும் கிடைக்காது என்பதால் அதை எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

புகையிலைக்கு அடிமையாவது பெரும் பிரச்சனையாக உள்ளது என்பதை அனைவரும் அறிந்துள்ளதாகவும்,

அதனால் ஒவ்வொரு ஆண்டும் இளைஞர் உள்ளிட்ட பலர் மரணிப்பதாகவும், சிகரெட், பான்மசாலா மற்றும் புகையிலை பொருட்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் பொருட்களின் விற்பனையைத் தடுக்க ஒன்றிய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, அவற்றின் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் மீது கூடுதல் வரிகளை விதிப்பது பொருத்தமற்றது என்றும், பொறுப்பற்ற செயல் என்றும் தனது உரையில் பதிவு செய்தார்.

இந்த கலால் வரி அதிகரிப்பு மற்றும் விலை உயர்வு அகியவை கள்ளநோட்டு புழக்கத்துக்கு வழிவகுக்காதா? கருப்புப்பணச் சந்தைக்கு வழிவகுக்காதா? என்று கேள்வி எழுப்பிய அவர், வரிகளை அதிகரித்துக் கொண்டே இருந்தால் புகார்கள் குறைவதைத் தாண்டி, அதிக கள்ளச்சந்தைப்படுத்தலுக்கு வழிவகுக்கும் என்றும் திட்டவட்டமாக உரையாற்றினார்.

இந்தியா முழுவதும் உள்ள நடுத்தர வர்க்கத்தினர் பெரும்பாலான வரிகளைச் செலுத்தும் நிலையில், எந்த வரி விலக்கும் கிடைக்காததால் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர் என்றும், பணவீக்கம் அதிகமாக உள்ளது, கல்விக் கட்டணம் அதிகரித்துள்ளது, வாழ்க்கைக்கான செலவு அதிகரித்துள்ளது, நகரங்களில் வசிப்போரின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாகவே உள்ளது என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்த அவர், பெரும் பணக்காரர்களும், அதிக வரி செலுத்துவோரும் மட்டுமே சலுகைகளைப் பெறும் ஒரே நாடு இந்தியாவாகும் என்றும் தனது விவாதத்தில் பதிவுசெய்தார்.

மாநிலங்களுக்கு பிரித்துக்கொடுக்கக்கூடிய வரி அல்லாத வருவாயை, அரசியலமப்புத் திருத்தம் மூலம் குறைந்தபட்சம் 50 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டும் என தமிழ்நாட்டின் முதல்வரும், எங்கள் தலைவருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி வருவதாக. தனது உரையில் குறிப்பிட்ட அவர், வருமான வரி பங்கு 15.25%, ஆகவும், கலால் வரி பங்கு 16.44% ஆகவும் குறைந்ததன் மூலம், நாட்டின் மக்கள் தொகையில் 6.12% கொண்ட தமிழ்நாட்டுக்கு கிடைக்க வேண்டிய பங்கு 4,079% குறைத்துள்ளது என்றும் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஒன்றிய அரசின் மொத்த வரியில் 23% செஸ் மற்றும் சர்சார்ஜ் ஆகியவை பிரிக்கக் கூடிய தொகுப்பிலிருந்து விலக்கப்பட்டுள்ள தால், மாநிலத்துக்கான மொத்த வரி வருவாயில் 32% பங்கைக் கட்டுப்படுத்துவதாகவும் உரையாற்றினார்.

ஒன்றிய அரசின் வரிகளுக்கு பங்களிக்கும் ஒவ்வொரு ரூபாக்கும் ஒரு ரூபாயை விட குறைவாகவே அளிக்கும் உத்தரபிரதேசம் மற்றும் பீகார் போன்ற வளர்ச்சியடையாத மாநிலங்கள் அதிக பகிர்வினை பெறுவதாகவும் காட்டினார்.

சமத்துவத்தையும் கூட்டாட்சியையும் சமநிலைப் படுத்துவதற்கு வருவாய் பகிர்வில் சீர்திருத்தங்கள் தேவைப்படுவதாகவும், மாநிலங்கள் தங்கள் நிதி சுயாட்சியைப் பாதுகாக்கும் அதே வேளையில், தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் பயனடைவதையும் உறுதி செய்வதாகவும், அதனாலேயே குறைவாக பெரும் எங்கள் பங்கை அதிகரிக்க வேண்டுமென கேட்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில பேரிடர் நிவாரண மேலாண்மை நிதியின் ஒதுக்கீடுகள் உண்மையான தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை என்று தனது உரையில் குறிப்பிட்ட அவர், பொது இடங்களில் புகைபிடிப்பதைத் தடை செய்வதற்காக ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது போல, புகையிலை பொருட்களையும் தடை செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும், அது தான் இந்த தேசத்திற்கு நல்லது என்றும் கூறினார்.

